பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 13 திங்கட்கிழமை 27.06.2022 கதிர் 234

### இது ரகசியம் அல்ல!

அரசியலில் தனித்துத் தன் கட்சி, தன் கொள்கை என்று நின்றாலும் கூட சில சமயங்களில் சிக்கல் வந்துவிடுவதுண்டு.

சேர்ந்து செயற்பட்ட தவறுக்காக குற்றப் பொறுப்பு ஏற்க வேண்டி நேர்ந்து விடுவது வழமை. சேர்ந்த 2

# கோட்டாபய நீடிக்கும் வரை சர்வதேச உதவிகள் கிட்டா!

## இராஜதந்திரி தயான் ஜயதிலக்க திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 27

நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற இலட்சினை நீடித்தால் ஒட்டுமொத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் கிடைப்பதில் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். 03

# நாணய நிதியம் வழங்கும் உதவி ஊழல்வாதிகளிடம் சிக்கிவிடும்!



## எச்சரிக்கின்றார் சுமந்திரன்

நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்னவென்பதை சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என பிரிட்டனைச் சேர்ந்த பிரபல இராஜதந்திரி ஒருவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தெரிந்துகொள்ளாவிட்டால், உதவிகள் தேவைப்படும் மக்களுக்குப் பதிலாக ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் உதவுவதற்கான அபாயம் 03

## கழுத்தைப் பிடித்து கோட்டாவை வெளியே தள்ளுவதே ஒரே வழியாம்

### மேர்வின் சில்வாவுக்கு வந்தது ஆவேசம்

எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே, அரசதலைவர் மாளிகையின் கதவுகளை உடைத்து, அரச தலைவரின் கழுத்தைப் பிடித்து அவரை வெளியே வீச வேண்டும் என்றார்.

கொழும்பில் 2

## அமெ.குழு வந்து சேர்ந்தது

அமெரிக்க திறைசேரி திணைக்களம் மற்றும் இராஜாங்கத் திணைக்களம் ஆகியவற்றின் உயர்மட்ட தூதுக்குழு நேற்று அதிகாலை 2.20 மணி அளவில் இலங்கையை வந்தடைந்துள்ளது.

அமெரிக்க தூதுக்குழுவினர் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கிருக்கவுள்ளனரென இலங்கைக்கான அமெரிக்க 03

## இன்று முதல் 3 மணி நேர மின்வெட்டு

இன்று முதல் ஜூலை 3ஆம் திகதி வரை 3 மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் 2

## எரிபொருள் கேட்க ரஷ்யாவுக்கு 2 அமைச்சர்கள் இன்று பயணம்

அமைச்சர்கள் ரஷ்யா பயணம். இந்த நிலையில் எரிபொருளை பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொள்ள அமைச்சர்கள் இருவர் ரஷ்யாவிற்கு பயணமாகவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 2

## மொட்டை விட்டுப் பிரிந்தோரின் புதிய கூட்டணி அடுத்த மாதமாம்



மொட்டு கூட்டணியில் இருந்து பிரிந்த கட்சிகளின் புதிய அரசியல் கூட்டணி குறித்த தகவல் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளதாக என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய சுதந்திர 03

## எரிபொருளுக்கு 'டோக்கன்' முறை





இன்று முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 2

## தெல்லிப்பளை வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் தீ விபத்து



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் நேற்று நேற்று மதியம் 2 மணியளவில் ஏற்பட்ட தீயின் காரணமாகப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தீயிற்கான காரணம் மின்சார கோளாறே என ஆரம்பத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 03

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நிகழ்ந்தது என்பதே முதல் கேள்வி

## அதற்கு விடை தேடுங்கள் என விஜேதாஸவுக்கு மனோ சாட்டை



கொழும்பு, ஜூன் 27

வடக்குக்கு போன நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவும், காணாமல் போனோர் அலுவலக தலைவர் மஹேஷ் கடுலந்தவும் 'மக்கள் ஒத்துழைத்தால், காணாமல் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்' என அங்கு கூறி வந்துள்ளனர். மேலும் காணாமல் போனோர் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, அரச மருத்துவமனைகளில் முன்னுரிமை எனவும் வாக்குறுதிகளை அளித்துள்ளனர்.

மக்களிடமிருந்து என்ன ஒத்துழைப்பை இவர்கள் கோருகிறார்கள் என எனக்கு தெரியவில்லை. வலிந்து காணாமல் போனோர் குடும்பங்களின் முதல் கேள்வி, முதல் கோரிக்கை, நானறிந்த வரையில், கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமல் போன தங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதே என நான் நினைக்கிறேன். இந்த முதல் கேள்விக்கு பதில் 03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குற்றத்திற்காக தவறு என்று தெரிந்த விடயத்தையும் ஆமோதித்துப் போக வேண்டிய இக்கட்டு வரும். அத்தகைய ஒரு விவகாரம் பற்றிய தகவல் இது.

தமிழர் தரப்பில் நீண்டகாலம் தொடர்ந்து எம்.பியாக இருப்பவர்களில் முக்கியமானவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. 1994 முதல் யாழ் மாவட்டத்தை அவர் பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த 28 ஆண்டுகளாக எம்.பியாக அவர் இருந்து வருகிறார்.

அவரின் அந்தச் சாதனைக்கு அவருக்கு முக்கிய காரணம் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைதான். அது இல்லாமல், 1988 வரை நடைமுறையில் இருந்த தேர்தல் தொகுதி பிரதிநிதித்துவ முறை இருந்திருக்குமானால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நாடாளுமன்றத்துக்கு இடையிடையே போய்வரும் வாய்ப்புத்தான் கிட்டியிருக்கும். அது கூட நிச்சயமும் இல்லை.

ஆகவே, இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையால் அதிக சாதக நிலையைப் பெற்றுக்கொண்டவரும், அதன் மேன்மையான தன்மையைப் புரிந்து கொண்டவரும் அமைச்சர் டக்ளஸாகத்தான் இருக்க முடியும்.

தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது தொடர்பாக கோட்டாபய அரசு, அமைச்சர் தினேஷ் குணவர்தனா தலைமையில் ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைத்திருந்தது. அந்த தெரிவுக்குழுவில் ஆளும் தரப்பினர் 9 பேர். எதிரணியினர் 6 பேர் என்று ஆரம்பத்தில் இருந்தமை பற்றி முன்னர் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். பின்னர் எதிரணித்தரப்பில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் சேர்த்துக் கொள்ளப்பட அது 9 பேருக்கு 7 பேராக மாறியது. ஆளும் தரப்பில் இருந்த பலரும் எதிரணிக்கு வந்துவிட்டதால், அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பின்னர் எதிர்த்தரப்பின் கை ஓங்கி விட்டது.

நாடாளுமன்ற தேர்தலுக்கு விகிதாசார பிரதிநிதித்துவ முறையை மாற்றவே கூடாது, அது அப்படியே தொடர வேண்டும்என்றுஎதிர்தரப்பினர்தெரிவுக்குழுவில் ஒற்றைக் காலில் நின்று வலியுறுத்தினர். குறிப்பாக மனோ கணேசன், சுமந்திரன், ஹக்கீம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பிக்கள் ஒருபுறம் நின்றனர். அவர்களோடுதான் விகிதாசார முறையை வற்புறுத்தும் அமைச்சர் டக்ளஸும் கடைசி அமர்வின்போது இருந்தார். பெரும்பாலும் அத்தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்தன ஓரிரு உறுப்பினர்களின் ஆதரவோடு தனித்து போயிருந்தார். அதனால் பெரும்பான்மையினரின்ஆதரவோடுகூடியஒருபரிந்துரையை அந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அவரால் எடுக்க முடியவில்லை.

இப்போது நாடாளுமன்ற தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை மாற்றுகின்ற ஒரு பரிந்துரையைதன்பாட்டில்கையெழுத்துவைத்து, தினேஷ் குணவர்தனா சபைக்கு சமர்பித்து இருக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதில் ஆச்சரியத்திற்குரிய விடயம் என்னவென்றால் அத்தகைய பரிந்துரைக்கு ஆதரவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கையெழுத்து வைத்திருக்கிறார்என்பதுதான். அந்தவிகிதாச்சார பிரதிநிதித்துவ முறை நீக்கப்படுமானால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த தேர்தலில் தீவகத் தொகுதியில் நின்று வெற்றி பெறலாம் என்று கற்பனை பண்ணுகிறாரோ தெரியவில்லை.

எனது அறிவின்படி அமைச்சர் டக்ளத் தேவானந்தா தாம் அரசுத் தரப்போடு சேர்ந்த குற்றத்துக்காக தன் தலையில் தானே மண்ணள்ளிப் போடுகிறார் என்றே தோன்றுகிறது. பாவம் அமைச்சர்...!

★ ★ ★

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் மற்றும் திறைசேரித் திணைக்களம் ஆகியவற்றின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு கொழும்பு வந்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. அந்தச் சூழலில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாக வேண்டி உள்ளது. இப்போது வந்திருக்கின்ற அமெரிக்க உயர்மட்டக் குழு அத்தகைய உடன்பாடு ஒன்றை இலங்கையோடு செய்வது குறித்து பூர்வாங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க இருக்கின்றது. அந்த ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள் நடைபெறுகின்றமையை ஒட்டி இன்றைய அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்படுகிறது. அதில் அமெரிக்காவுடன் செய்யப்படுகின்ற ஒப்பந்தத்தின் அடிப்படை பற்றிய தகவல்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. அதில் இந்த ஒப்பந்தத்திற்கான அமெரிக்க தரப்பின் மூன்று நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

அதில் முதலாவது நாட்டை ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் கொண்டுவருவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு இருப்பதாக அறிய வந்தது.

ஆக அமெரிக்க உயர்மட்டக் குழுவின் வருகையின் பின்னால் புதைந்திருக்கும் பிரதான விடயம் நாட்டை ஜனநாயகமயப்படுத்துவதாகத்தான் இருக்கும் என்று நம்பலாம். அதற்கு ஜனாதிபதி கோட்டாபய இடம் கொடுப்பாரா, அமெரிக்க உதவிகளைப் பெறக்கூடியதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுமா என்பவை எல்லாம் கேள்விகள்தான்.

இதற்கிடையில் நாட்டை ஜனநாயகமயப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக, நீண்ட பல வருடங்களாக நடைபெறாமல் இருக்கும் மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தி முடிக்க வலியுறுத்தும் பிரச்சாரம் ஒன்றை மனோ கணேசன் எம்.பி., ஏனைய எதிரணி மற்றும் சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளின் தலைவர்களோடு சேர்ந்து அடுத்து வரும் நாள்களில் ஆரம்பிக்க இருக்கிறார் என தெரிகிறது. எப்போதோ தொடங்கியிருக்க வேண்டிய முயற்சி. இப்போதாவது தொடங்குகிறார்கள் என்று ஆறுதல் பட வேண்டியதுதான்.

– மின்னல் –

# சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் கூட்டணி

## சம்பிக்க, குமார வெல்கம, அநுரபிரியதர்சன, சந்திம உள்ளிட்ட பலருக்கு அழைப்பு

**முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பாக திரைமறைவில் அரசியல் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.**



எனினும், இந்தக் கூட்டணியில் சந்திரிகா உத்தியோகபூர்வமான தலைமைப் பொறுப்பை வகிக்க மாட்டார் எனவும், தலைமைத்துவச் சபை கூட்டணியை வழிநடத்தும் எனவும் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டணியில் இணையுமாறு முன்னாள் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான பாட்டலி சம்பிக்க ரணவக்க, அநுரபிரியதர்சன யாப்பா, சந்திம வீரக்கொடி உள்ளிட்ட பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கமவுக்கும் கூட்டணியில் உயர் பதவி வழங்கப்படும் எனப் பேசப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை அரசியல் ரீதியாகக் கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

ராஜபக்ஷவினர் நாட்டைக் கொள்ளையிட்டு நாட்டை அழித்துள்ளனர் எனவும், மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழித்து விட்டார் எனவும் சந்திரிகா குற்றம் சுமத்தி வருகின்றார்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமையை விரட்ட வேண்டும் எனவும் அவர் கூறி வருகின்றார்.

## இன்று முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஏ முதல் டபிள்யூ வர்சியான வலயங்களுக்கு பகல் வேலையில் 1 மணி 40 நிமிடங்களும் இரவில் ஒரு மணி நேரம் 20 நிமிடங்களும் மின்சாரம் தடைப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகரப் பகுதியில் ஜூலை 2 மற்றும் 3 ஆம் திகதிகள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6 மணி முதல் 8 மணி வரை இரண்டு மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, M, N, O, X, Y, Z வலயங்களில் ஜூலை 2 மற்றும் 3 ஆம் திகதிகள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 5 மணி முதல் காலை 8 மணி வரை 3 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் கேட்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இரண்டு அமைச்சர்களும் இன்று ரஷ்யா செல்லவுள்ளனர் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## எரிபொருளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வரிசையில் நிற்கும் மக்களுக்கு இலக்கம். (டோக்கன்) வழங்கி அதற்கேற்ப எரிபொருளை பின்னர் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

நீண்ட வரிசையில் மக்கள் காத்து நிற்கின்றமையை ஒட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

## கழுத்தைப் பிடித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் ஸ்ரீபாதத்தில் மணியை அகற்றி விற்று, பன்னிரு மகாபஹனை விற்று, பெரிய பகோடாக்களின் பொக்கிங்களை எடுத்து, அதமஸ்தானத்தை வணங்கி, ஏலார பயன்படுத்திய தங்க வண்டியை திருடி, விடுதலைப் புலிகளின் தலைவர் மறைத்து வைத்திருந்த தங்கத்தையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com
**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**



## கோட்டாபய நீடிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாரிய அளவில் உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கும் இந்தியாவினால் இலங்கையைத் தொடர்ந்து தோளில் சுமந்து கொண்டு செல்ல முடியாது என்றும் ஒட்டுமொத்த சர்வதேசதரப்பினது ஒத்துழைப்புக்களின் மூலமே இலங்கையால் நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான தற்போதைய அரசாங்கம் பல்வேறு சர்வதேசத் தரப்புக்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்துள்ள நிலையில் அவை குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைகளில் இருந்து மீள்வதாக இருந்தால் முதலில் சர்வதேசத்தின் ஒட்டுமொத்தமான ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் அதற்குத் தற்போதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற இலட்சினைதான் பிரதான தடையாக உள்ளது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

குறிப்பாக கூறுவதனால், நாட்டின் பொருளாதார நெருக்கடியானது, 'நபர் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது' என்று சர்வதேச நாணயநிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த ஆழமான கூற்று, ஆட்சி அதிகாரத்தில் உள்ள நபரின் தவறான, தாமதமான தீர்மானங்களே நாட்டில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த நபரும் தான் தவறான தீர்மானங்களை எடுத்துள்ளார் என்பதைப்பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டும் உள்ளார். அவ்விதமான ஒருவர் பதவியில் இருக்கின்றபோது சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்கள் எவ்வாறு உதவிகளை வழங்கும்?

அடுத்து, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் கோட்டாபயவை, எதேச்சதிகாரத் தலைவர் என்றே கருதுகின்றன. அதற்கு அவரது காலத்தில் இடம்பெற்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் அடிப்படையாகின்றன.

அவ்விதமான நிலைப்பாட்டில் உள்ள சர்வதேச நாடுகள் எவ்வாறு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்? அடுத்து, நெருக்கடிகள் ஆரம்பித்து தீவிரமடைந்து கொண்டிருக்கும் நிலையிலும், தற்போது வரையிலும் உள்நாட்டில் உள்ள தலைசிறந்த பொருளாதார நிபுணர்களை ஒருங்கிணைத்து எதிர்காலம் குறித்து பேச்சுக்கள் முன்னெடுக்கப் படவுமில்லை. பாதை வரைபடமொன்று கூடத் தயாரிக்கப்படவில்லை.

அதேபோன்று இலங்கை குறித்த பரிச்சயமுள்ள சர்வதேச பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றிருக்கலாம். குறிப்பாக, உலக வங்கியின் முன்னாள் ஆலோசகரும் நோபல் பரிசு பெற்றவருமான ஜோசப் போன்றவர்களை அணுகியிருக்காலம். அவ்விதமான எந்த முயற்சிகளும் எடுக்கப் படவில்லை.

அதேநேரம், வெளிவிவகார அமைச்சில் படைத்தரப்பு அதிகாரி நீக்கப்பட்டு சிவில் பிரதிநிதியான அருணி விஜேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விதமானர்கள் முன்வந்து, நாட்டின் வெளிவிவகார பெருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்து அணுகுமுறைகளை முன்னெடுக்க வேண்டும். தற்போது வரையில் அவ்விதமான முயற்சிகள் இடம்பெற்றமைக்கான பதிவுகள் இல்லை.

இந்த நிலையில் அயல்நாடான இந்தியா, பாரியளவில் இலங்கைக்கு உதவிகளை வழங்கி தனது தோளில் சுமந்து கொண்டிருக்கின்றது. இந்தியாவினால் இலங்கையின் ஒட்டுமொத்த தேவைகளை பூர்த்தி செய்து தொடர்ந்தும் தோளில் சுமக்க முடியாது.

அதேநேரம், கொடையாளர்கள் மாநாடு ஒன்றை நடத்துவது என்றால் கூட சாத்தியமாகாத நிலையில் தான் நாடு உள்ளது. குறித்த மாநாட்டில் கடன்களை மீளச் செலுத்தல் உள்ளிட்ட எதிர்காலத் திட்டங்கள் குறித்த வரைவு கூட இல்லை.

ஒருவேளைவரைவுதயாரிக்கப்பட்டால் கூட நிபுணர்கள் குழு இல்லாத நிலையில் அதில் கையொப்பமிடுபவர்கள் யார் என்ற பிரச்சினைகள் உள்ளன. அவ்விதமான நிலையில் எவ்வாறு சர்வதேசம் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று எதிர்பார்க்க முடியும்?– என்றார்.

---

## வலிந்து காணாமலாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேடுங்கள். அதையடுத்து குடும்பங்கள் விரும்பினால், கொடுப்பனவுகள், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, அரசமருத்துவமனைகளில்முன்னுரிமை ஆகியவற்றை வழங்கலாம். இதை நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவும், காணாமல் போனோர் அலுவலகத் தலைவர் மஹேஷ் கடுலந்தவும் புரிந்துக் கொள்ள வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறினார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது:–

கடந்த ஆட்சி காலத்தின் கடைசி வருடத்தில், இந்தக் காணமல் போனோர் அலுவலகம் எனது அமைச்சின் கீழ் இருந்தது. அப்போது அதன் தலைவராக, இன்றைய இலங்கை சட்டத்தரணிகள் சங்கதலைவர் சாலியபீரிஸ் செயற்பட்டார். நிமல்கா பெர்ணாண்டோ போன்றோரும் அங்கத்தவர்காளாகச் செயற்பட்டனர். அது ஒரு சுயாதீன ஆணைக்குழு அல்ல. எனினும் சுயாதீன ஆணைக்குழுவுக்குச் சமானமாக அது சுதந்திரமாகச் செயற்பட அமைச்சர் என்ற வகையில் நான் அனுமதி அளித்து இருந்தேன்.

வடக்கு, கிழக்கில் காணாமல் போனோர் குடும்பங்களுக்குக் கொடுப்பனவுகள் கொடுக்க, நிதி ஒதுக்கீடு செய்து, அதை வழங்க முயன்ற போது – அந்தக் குடும்பத்தவர் அதை வாங்க மறுத்த போது – அதை வலியுறுத்த வேண்டாம் என நான் பணிப்புரை விடுத்தேன். மேலும் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அலுவலகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நிகழ்வுகளில் அமைச்சரான நான் கலந்துக் கொள்வதைத் தவிர்த்தேன். தென்னிலங்கை மாத்தறையில் அலுவலகம் திறக்கப்பட்ட போது அதில் நான் கலந்துக் கொண்டேன். 1988 களில் தென்னிலங்கையில் இப்படி காணாமல் போனவர்களின் சிங்கள இளையோரின் குடும்பங்கள், இந்த கொடுப்பனவுகளை பெற விருப்பம் தெரிவித்தபோது, அவற்றை வழங்க நான் பணிப்புரை விடுத்தேன்.

2015 ஒக்டோபர், ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலின் 30/1 இலக்க தீர்மானத்தின்படி, இந்தக் காணாமல் போனோர் அலுவலக சட்டமூலத்தை நாம் கடந்த ஆட்சியின் போது நிறைவேற்றினோம். அன்று எதிர்கட்சியாக இருந்த, இன்றைய ஆளும்கட்சியான ராஜபக்ஷர்களின் பொதுஜன முன்னணி கட்சியினரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இது நிகழ்ந்தது. எனினும் நாம் சட்டத்தை நிறைவேற்றி இந்த காணமல் போனோர் அலுவலகத்தை அமைத்தோம். இது ஓர் ஆரம்பம் மட்டுமே.

2018 ஆம் வருடம் இந்த அலுவலகம் எனது பொறுப்பில் வந்தபோதே நான் ஒரு விடயத்தில் தெளிவாக இருந்தேன். கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமல் போன தங்கள் உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்பதே வலிந்து காணாமல் போனோர் குடும்பங்களின் முதல் கோரிக்கை என்பதை துறைசார் அமைச்சராக நான் உணர்ந்தே இருந்தேன். இன்றும் அப்படியே இருக்கிறேன்.

கடந்த ஆட்சியின் போது பல கட்டமைப்பு முன்னேற்றங்கள் நிகழ்ந்தாலும்கூட, அன்று எதிர்கட்சியாக இருந்த, இன்றைய ஆளும்கட்சியான ராஜபக்ஷர்களின் பொதுஜன முன்னணி எம்மை முழுமையாகக் கடமையாற்ற விடவில்லை. இந்த காணமல் போனோர் அலுவலகம், முன்னாள் புலிகளுக்கு கொடுப்பனவுகள் கொடுக்கின்றது எனவும், புலிகளுக்காகவே அது அமைக்கப்பட்டது எனவும் இவர்கள் சொன்னார்கள்.

இன்று திடீரென முற்போக்கு ஜனநாயகவாதிகளாக வேடம் பூண்டுள்ள பல்வேறு பிரபல அரசியல்வாதிகளும் எம்மை எதிர்த்தார்கள். பிரபல பௌத்த பிக்குகள் இனவாதம் கக்கினார்கள். முன்னாள் புலிகளுக்காக அமைக்கப்பட்ட அலுவலகம் இன்னொரு பிரபல புலியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது என என்னையும் திட்டித் தீர்த்தார்கள். இன்று இவற்றுக்கு எல்லாம் பதில் கூறவேண்டிய காலம் வந்து விட்டது. இன்றும் இனவாதம் இல்லாமல் இல்லை. ஆனால், அந்த இனவாதத்தை நேரடியாக எதிர்க்கக்கூடிய காலம் வந்து விட்டது. மதம் அரசியலில் வேண்டாம் என்றும், விகாரைகளுக்கு திரும்புங்கள் என்றும் பௌத்த பிக்குகளை பார்த்து நேரடியாக கூறக்கூடிய காலம் வந்து விட்டது.

இவற்றையெல்லாம், இன்றைய பொருளாதார நெருக்கடி உருவாக்கி விட்டது. அந்த நெருக்கடித்தான், பெரும்பான்மை சிங்கள இளையோர் மத்தியில் காலிமுக திடல் போராட்டத்தையும் உருவாக்கி விட்டது. ஆகவே இனி நாங்கள், எங்கே எங்கள் உறவுகள்? கடத்தப்பட்டு, சரணடைந்து, கைதாகி காணாமல் போன எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என கேள்விகள் எழுப்பும் வேளை வந்து விட்டது. 2007 ஆம் வருடம் நானும், நண்பன் ரவிராஜும் ஆரம்பித்த மக்கள் கண்காணிப்பு குழுவின் நோக்கங்களை நிறைவேற்ற காலம் வந்து விட்டது என நினைக்கிறேன். – என்றார்.

---

## நாணய நிதியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்படுகிறது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

இதன் காரணமாகவே ஜனாதிபதி உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு தான் வலியுறுத்துகிறார் என அவர் கூறியுள்ளார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இந்த நிலையில் எந்தவொரு இடைக்கால நடவடிக்கைகளிலும் ஆளும்கட்சி உள்வாங்கப்படக் கூடாது.

அதேபோன்று ஊழல் நிறைந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியமை தவறு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு இடைக்கால நடவடிக்கைகளிலும் ஆளும்கட்சி உள்வாங்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டை பிரதான எதிர்க்கட்சிகள் ஒரு நிபந்தனையாக முன்வைத்தமை சரியான விடயம் என்றும், அதேபோன்று ஊழல் நிறைந்த ஓர் அரசாங்கத்துடன் ரணில் இணைந்தமை தவறாகும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## மொட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணி, லங்கா சம சமாஜக் கட்சி, பிவித்துரு ஹெல உறுமய, இடதுசாரி முன்னணி உட்பட ஒன்பது பங்காளிக் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி உருவாக்கப்படவுள்ளது.

புதிய கூட்டணிக்கு பல பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளனஎனவும், எனினும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

கூட்டணியின் தலைமை குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அதிகாரிகள் குழுவை நியமிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது.

## அமெ.குழு வந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதரகம் தெரிவித்துள்ளது.

ஆசியாவிற்கான பிரதி உதவித் திறைசேரி செயலாளர் றொபர்ட் கப்றொத், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதி உதவி இராஜாங்க செயலாளரான தூதுவர் கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் இந்தத் தூதுக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் பல்வேறு அரசியல் பிரதிநிதிகள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.

இலங்கையர்களுக்கு அமெரிக்கா உதவி செய்வதற்கான, மிகவும் செயற்றிறன் வாய்ந்த வழிமுறைகள் தொடர்பில் தமது அனைத்து சந்திப்புகளிலும் அவர்கள் ஆராய்வார்கள் என அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

---

## தெல்லிப்பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீயைப்பபடையினரும் பொது மக்களும் இணைந்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோதும் பெருமளவு பொருள்கள் நாசம் அடைந்துள்ளன.

களஞ்சிய இருப்புக் கணக்கெடுப்பின் போது அழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு என ஒதுக்கியவையே இத்தீயில் பெரும்பாலும் அழிந்துள்ளன ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.









நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விபரீதங்களுக்கு வாய்ப்பு

**நாட்டின் மோசமான பொருளாதார நிலைமை, மக்களின் அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு போன்றவை நாட்டில் பெரும் வன்முறையாக வெடிக்கலாம், அதற்கான ஆபத்து ஏதுநிலைகள் காணப்படுகின்றன என்று இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம்.**

**அது தொடர்பில் நாட்டின் புலனாய்வு அமைப்புகள் ஆட்சித் தலைமைக்குத் தொடர்ந்து எச்சரிக்கைத் தகவல்களை – விரிவான அறிக்கைகளை – சமர்ப்பித்து வருகின்றன என்று இப்போது செய்திகள் வெளிகாகியுள்ளன.**

**எனினும், மக்கள் மத்தியில் கிளர்ந்து வரும் எரிச்சல், சீற்றம், ஆதங்கம் என்பன குறித்து ஆட்சித் தலைமை கவனம் எடுக்கவில்லை அல்லது சிரத்தை கொள்ளவில்லை என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

**பொதுமக்களின் அதிருப்தி மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. எல்லாக் காலத்திலும் சட்டத்துக்கும் ஒழுங்குமுறைக்கும் மக்கள் கட்டுப்பட்டு இருப்பார்கள் என்று அதீத நம்பிக்கை கொள்ளக் கூடாது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.**

**ஒரு புறம் மக்கள் கியூகளில் – வரிசைகளில் – மணித்தியாலக் கணக்கில் நின்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிட்டாமல் வெறும் கையோடு திரும்புவதால் ஏற்படும் கோபம். மறுபுறம் தினசரி பொருள்களின் விலைகள் கண்மண் தெரியாமல் அதிகரிப்பதால் ஏற்படும் இயலாமை. அனைத்துப் பொருள்களுமே இரண்டு மடங்கு விலையாகி விட்டன. எரிபொருள் போன்றவற்றின் விலை அதிகரிப்பு மூன்று மடங்கையும் தாண்டி விட்டது. ஆனால் வருமானம் மட்டும் உயரவில்லை. பல வீடுகளில் ஒன்று அல்லது இரண்டு நேரம் பட்டினி என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது.**

**யாரோ ஓர் அரசுத் தலைவர் இழைத்த முட்டாள்தனமான தவறுகளுக்காக பொதுமக்களாகிய நாம் பட்டினி கிடந்து, அத்தியாவசியப் பொருள்கள் வசதிகளின்றி சாவதா என்ற மக்களின் சீற்றம் தினசரி பெருகி வருகின்றது.**

**பட்டினிக் கஷ்டத்தினால் களவு, கொள்ளை, சூறையாடல், அபகரிப்பு அதிகரித்து விட்டன. அந்தக் குற்றங்கள் தொடர்பான விடயங்களைக் கையாள வேண்டிய பொலிஸார் எரிபொருள் நிலைய கியூகளின் பணியைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.**

**முட்டாள்தனமான ஆட்சித்தலைமையின் மோசமான நிர்வாகத்தினால் நாடு வங்குறோத்தாகியிருக்கும் சூழ்நிலையில் மக்கள் வீதிக்கு இறங்கி மீண்டும் போராடும் ஏது நிலைகள் தென்படுகின்றன.**

**மக்களின் இப்போதைய சீற்ற மனநிலைமை வெறுமனே ஆட்சியாளர்களை வீட்டுக்குப் போ என்ற கோஷத்துடன் அடங்கி விடாது. வன்முறைப் புயல் வீசும் கோரத் தாண்டவமாக அந்தப் போராட்டங்கள் உருவெடுத்து, மாறக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன என்றே அரசுக்கு – ஆட்சித் தலைமைக்கு – இப்போது சமர்ப்பிக்கப்படும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என அறிய வருகின்றது.**

**பட்டினி, வாழ இயலாமை, பொருளாதார நிலைமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் போன்ற கஷ்டத்துடன் ஒன்று திரளும் மக்களின் கும்பல் மனோபாவம், மோசமானது, விபரீத விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.**

# மத்திய வங்கி ஆளுநரை நீக்கினால் அரச எதிர்ப்பு போராட்டம் தீவிரமடையும்

## ஜனாதிபதி, பிரதமருக்கு ஜகத் குமார கடிதம்



அரசியல்வாதிகளை காட்டிலும் அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்களின் நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ளதுடன், அரசாங்கத்துக்கு எதிரான பல்வேறுபட்ட எதிர்ப்புக்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு, நம்பிக்கை கொண்டுள்ள மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை பதவி நீக்கினால் அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டம் மீண்டும் தீவிரமடையும்.

நாட்டுக்காக தொடர்ந்து சேவையாற்றும் வாய்ப்பை மத்திய வங்கியின் ஆளுநருக்கு வழங்க வேண்டும்.

ஆளுநரை பதவி நீக்க ஏதேனும் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் அதனை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என வலியுறுத்தி பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை ஆளுநர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து வெளியாகியுள்ள செய்தி அவதானத்துக்குரியன. இந்த செய்தி உண்மையா அல்லது வெறும் வதந்தியா என்பது இரண்டாம் பட்சமாகவே ஆராயப்படும்.

இந்த செய்தியைக் கருத்திற் கொண்டு நாட்டு மக்கள் எடுக்கும் தீர்மானம் தற்போதைய நெருக்கடி நிலைமையை மேலும் தீவிரப்படுத்தும்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மற்றும் மத்திய வங்கியின் உயர்மட்ட அதிகாரிகள் தூரநோக்கமற்ற வகையில் முன்னெடுத்த தீர்மானங்கள் தற்போதைய மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என நாட்டு மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.அத்துடன் அரசியல்வாதிகளின் தூரநோக்கமற்ற செயற்பாடுகளும் பொருளாதார நெருக்கடிக்கு பிறிதொரு காரணம் என மக்கள் கருதுகிறார்கள்.

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில் மக்களின் நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்ட போது மக்களின் நம்பிக்கை,திறமை மற்றும் தொழிற்துறை தகைமை ஆகியவற்றைக் கொண்டுள்ளவராகக் கருதப்பட்டு கலாநிதி நந்தலால் வீரசிங்க நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டு மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறுகிய காலத்தில் முன்னேற்றகரமான தீர்மானங்களை செயற்படுத்தியுள்ளமை அவதானிக்கத்தக்கது. நெருக்கடியான சூழ்நிலையில் பொறுப்பை ஏற்க அரச அதிகாரியின் கடமைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அரச கட்டமைப்பில் தீர்மானங்கள் முன்னெடுப்பது தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை மேலும் வலுப்படுத்தும்.

மக்கள் மத்தியில் தற்போது அரசியல்வாதிகளைக் காட்டிலும் அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ள நிலையில் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறுப்பட்ட எதிர்ப்புக்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டு, நம்பிக்கை கொண்டுள்ள மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவை பதவி நீக்கினால் அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் மீண்டும் தீவிரமடையும்.

நாட்டுக்காக தொடர்ந்து சேவையாற்றும் வாய்ப்பை மத்திய வங்கியின் ஆளுநருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆளுநரை பதவி நீக்க ஏதேனும் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் அதனை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# அமெரிக்காவினது கொள்கையின் மையமாக சர்வதேச நாணய நிதியம்

## வாசுதேவ குற்றச்சாட்டு

அமெரிக்காவினது கொள்கையின் மையமாக சர்வதேச நாணய நிதியம் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், ரஷ்யா – உக்ரைன் மோதலுக்கு சர்வதேச நாணய நிதியமும் பங்களித்துள்ளதாகத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தம் காரணமாக, உக்ரைன் நேட்டோவில் சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நீண்ட கால அடிப்படையில் அரபு நாடுகளிடம் இருந்து எரிபொருளை அல்லது டொலரைப் பெறுவதற்கான வழிமுறையைக் கண்டறிய வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இலங்கையால் டொலரைப் பாதுகாக்க முடியாது எனவும் எதிர்காலத்தில் வட்டி செலுத்துவதற்கும் டொலர்களை பெற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை உறுதிப்படுத்திய பின்னர் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை ஏன் பெற முடியாது என்றும் வாசுதேவ நாணயக்கார கேள்வியெழுப்பினார்.

# கால்நடை உணவு உற்பத்திக்கு அரிசி, நெல் பயன்படுத்தத் தடை

கால்நடை உணவு உற்பத்திக்காக அரிசி அல்லது நெல்லை நேரடியாக அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்துவதை தடை செய்யும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் படி, கால்நடை உணவு உற்பத்திக்காக அரிசியை விற்பனை செய்தல் அல்லது சேமித்து வைப்பது மற்றும் கொண்டு செல்வது போன்ற அனைத்து நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் சட்டத்தின் கீழ் 24 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, எந்தவொரு இறக்குமதியாளர், உற்பத்தியாளர், வர்த்தகர் அல்லது விநியோகஸ்தர் கால்நடை உணவு உற்பத்திக்காக அல்லது வேறு ஏதேனும் மூலப்பொருளுக்காகவோ நேரடியாக அரிசி அல்லது நெல்லை இறக்குமதி செய்வது, விற்பனை, விநியோகம் செய்வது அல்லது சேமித்து வைப்பது தடை செய்யப்படும்.அதேவேளை அதிக பட்ச சில்லறை விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்பவர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடரும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

# சர்வதேச செஸ் ஒலிம்பியாட் இம்முறை மாமல்லபுரத்தில்!

## 187 நாடுகளின் 2,500க்கும் அதிக வீரர்கள் பங்கேற்பு





சர்வதேச 44 ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழகத்தில் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் வருகின்ற ஜூலை 28 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 187 நாடுகளின் 343 அணிகளைச் சேர்ந்த 2,500 க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ளனர். இந்நிலையில், செஸ் ஒலிம்பியாட்டியில் இருந்து விலகிக் கொள்வதாக சீன அணி அறிவித்துள்ளது.ஆனால்,அதற்கான காரணங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. இதற்கு முன்னதாக,2014 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செஸ் ஒலிம்பியாட் ஓபன் பிரிவில் சீனா தங்கம் வென்றுள்ளது. குறிப்பாக,சீன மகளிர் அணியினர் இதற்கு முன் நடந்த இரண்டு தொடர்களிலும் தங்கம் வென்றிருந்தனர்.

இந்த நிலையில், 44 ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியில்இருந்துவிலகுவதாகசீனாஅறிவித்துள்ளது. அதே சமயம்,உக்ரைன் மீது போர் தொடுத்ததன் காரணமாக ஏற்கனவே ரஷ்யா அணிக்கு செஸ் ஒலிம்பியாட்டியில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவுக்கு தங்க பதக்க வாய்ப்பு அதிகம் என்று கூறப்படுகிறது.

இதனிடையே,செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான வரலாற்று சிறப்புமிக்க ஜோதி ஓட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி, கடந்த ஜூன் 19 மாலை 5 மணிக்கு டெல்லி இந்திரா காந்தி மைதானத்திலிருந்து தொடங்கி வைத்தார்.இதனைத் தொடர்ந்து,நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்கள்,யூனியன் பிரதேசங்களை செஸ் ஒலிம்பியாட் ஜோதி சுற்றி வரும் நிலையில், ஜூலை 28 ஆம் திகதி தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலினின் கையில் ஜோதி ஒப்படைக்கப்பட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடங்கவுள்ளது.

செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா நேரு உள்விளையாட்டு அரங்கில் பிரமாண்டமாக நடைபெற உள்ள நிலையில்,இவ்விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

செஸ் ஒலிம்பியாட் ஜோதி வருகிற ஜூலை 27 ஆம் திகதி மாமல்லபுரத்தை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஸ் ஒலிம்பியாட்டின் முதல் ஜோதி ஓட்டம் டெல்லியில் கடந்த 19ஆம் திகதி தொடங்கியது. செஸ் ஒலிம்பியாட் ஜோதி தொடர், ஓட்டம், 40 நாள்கள் இந்தியாவில் உள்ள 75 நகரங்களில் வலம் வருகிறது. அந்த வகையில், செஸ் ஒலிம்பியாட் ஜோதி உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரத்தை வந்தடைந்துள்ளது. இதனை செஸ் கிராண்ட்மாஸ்டர் தேஜஸ் பக்ரேவிடமிருந்து அம்மாநில மந்திரி சோமேந்திர தோமர் பெற்றுக்கொண்டார். ஆக்ரா,கான்பூர்,லக்னோ ஆகிய முக்கிய நகரங்களுக்கு ஒலிம்பியாட் ஜோதி செல்ல உள்ளது.



# சீனாவை மீள அச்சுறுத்தும் கொரோனாப் பேரரக்கன்!

மக்காவோ நகரத்தில் 600,000 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களிடம் கொரோனா வைரஸ் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில்சீனாவில்தயாரிக்கப்பட்டதடுப்பூசிகள் கொரோனாவை கட்டுப்படுத்தவில்லை என முறைப்பாடு எழுந்துள்ளது. ஏற்கனவே தடுப்பூசி போட்டவர்கள் புதிய தொற்றுப் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர் என ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

சீனாவின் மக்காவோ நகரில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த, மதுக்கடைகள், திரையரங்குகள் மூடப்பட்டன. 5,000 க்கும் மேற்பட்ட மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பெய்ஜிங் கொரோனா முதன்முறையாக பரவிய சீனாவில் கட்டுப்பாடுகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அந்நாட்டில் மொத்தம் 2,25,487பேர் தற்சமயம் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சீனாவின் தென் கடற்கரை நகரமான மக்காவோவில் புதிதாக 39 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. இதை அடுத்து அங்குள்ள 12க்கும் மேற்பட்ட குடியிருப்பு பகுதிகளை அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர். அந்த பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளதாக சைனா டெய்லி இதழ் தெரிவித்துள்ளது. அந்த நகரத்தில் 5,000 க்கும் மேற்பட்ட மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மதுக்கடைகள், திரையரங்குகள், சலூன்கள், பூங்காக்கள் மூடப்பட்டன.



# எரிபொருளுக்கு வரிசையில் காத்திருப்பதால் சத்திரசிகிச்சைகளை இரத்துச் செய்யநேரும்!

## இலங்கை மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை

எரிபொருள் பற்றாக்குறையால் சுகாதாரத்துறை கடும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்ள சுகாதாரத்துறையினர் எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதால் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் உப தலைவர் விசேட வைத்தியர் சித்ரான் ஹதுருசிங்க இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

வைத்தியர்களால் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மேலும் இதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் வைத்தியர்கள் தமது சேவைகளை முன்னெடுத்து செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

மகப்பேற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் வைத்தியர்களும் சிகிச்சைகளை இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமையால் இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது.

எளிமையாக மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகள் இன்று சிக்கலானவையாக மாற்றமடைந்துள்ளன. இதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும். – என்றார்.

## சட்டவிரோதமாக ஆஸி செல்ல முயற்சி; இந்த ஆண்டில் மட்டும் 399 பேர் கைது!

2022 ஆம் ஆண்டு இதுவரையில் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 399 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சிப்பவர்களிடம் இருந்து கடத்தல்காரர்கள் 2 லட்சம் முதல் 10 லட்சம் ரூபா வரை பணம் பெற்றுக் கொள்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த கடத்தல்காரர்கள் பழுதடைந்த மற்றும் உடைந்த படகுகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளில் பயன்படுத் துகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபடும் கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

## இன்று முதல் பஸ் கட்டணம் 35 வீதத்தால் எகிறுகின்றது!

இன்று (திங்கட்கிழமை) முதல் பஸ் கட்டணத்தை 35 வீதம் ஆகவும் குறைந்தபட்ச கட்டணத்தை 40 ரூபாவாகவும் அதிகரிக்க தனியார் பஸ் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இன்றைய எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் ஜுலை முதலாம் திகதி வருடாந்த கட்டண திருத்தம் என்பனவற்றை கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## என் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை!

### நாமல் மறுப்பு



எந்தவொரு அரச நிறுவனத்துக்கும் ஊழியர்களையோ அதிகாரிகளையோ நியமிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட வெளியிட்ட தகவல் தொடர்பாககருத்துதெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னால் அரச நிறுவனத்துக்கும் ஊழியர்களை நியமிக்க முடியும் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்கான அதிகாரிகளை நியமிக்கும் செயற்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட குழுவால் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அத்தோடு தான் முன்னர் வகித்த அமைச்சுக்களுக்கான அதிகாரிகளையும் அந்தக் குழுவே நியமித்ததாகவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

## மனைவியைக் கோடரியால் தாக்கி கொன்ற கணவர்!



நுவரெலியா சாந்திபுர ஒலிபண்ட் மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் கணவரால் கோடாரியால் தாக்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவத்தில் ஒன்றரை வயது மற்றும் மூன்றரை வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தாயான சுப்பிரமணியம் சத்தியவாணி (வயது -24) என்ற தாயே பரிதாபமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளம்தாயின் கணவர் தோட்டத்தில் தொழில் செய்து வருவதுடன், பகுதி நேர வருமானத்துக்கு நுவரெலியா நகரில் ஓட்டோ செலுத்தி வருகின்றார்.

இந்நிலையில், சம்பவ தினமான சனி இரவு தனது தொழிலை முடித்து விட்டு வீடு திரும்பிய கணவருக்கும், மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஆத்திரமடைந்த கணவன், கோடரியால் மனைவியின் தலையில் தாக்கியுள்ளார்.

இதன்போது சம்பவ இடத்திலேயே மனைவி உயிரிழந்தமையுடன், கணவன் தனது இளைய மகளைத் தூக்கிக் கொண்டு, இரவோடு இரவாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

மேலும் சம்பவ இடத்திற்கு ஞாயிறு காலை நுவரெலியா மாவட்ட நீதிவான் விஜயம் செய்து மரண விசாரணை நடத்தியுள்ளார்.

நீதிவானின் உத்தரவுக்கு அமைய சடலம் சட்டவைத்தியர் ஒருவரின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சிங்கள கற்கையை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு யாழில் சான்றிதழ் வழங்கிவைத்தார் நீதி அமைச்சர்!







(கலையமுதன்)


நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இரண்டாம் மொழி சிங்கள கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம் இந்து பௌத்த கலாசார பேரவையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் உரையாற்றிய விஜயதாஸ ராஜபக்ஷ –

இரண்டாம் மொழி கல்வியின் அவசியம் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தெரிந்திருப்பது அவசியம் மற்றும் இனங்களுக்கு இடையில் பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்துவதற்காக மொழிகள் அவசியமாகின்றன ஆகிய கருத்துகளை முன்வைத்தார். இரண்டாம் மொழி கற்கை நெறி நிலையத்தின் இயக்குநர் இராமச்சந்திரன் உரையாற்றும்போது– தற்போது நாட்டில் உள்ள நேர்மையான புத்திஜீவிகளில் ஒருவர் விஜயதாஸ ராஜபக்ஷ எனவும் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு தற்போது நாட்டில் இருக்கும் பொருத்தமானவர் இவர்தான் எனவும் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் யாழ்ப்பாணமாவட்டஅரசாங்கஅதிபர்கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், 52 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் உதவி அரசாங்க அதிபர் அதிகாரிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# குலநாச பலன் முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம்!

**இணைப்பு 1 - பூர்வ காரண ஆகமம் 59ம் படலம் லிங்க ஸ்தாபன விதி 10வது ஸ்லோகம் கும்பாபிஷேக முகூர்த்தத்தில் எட்டாமிடத்தில் கிரகங்கள் இருத்தலாகாது**



**இணைப்பு 2 காலப்பிரகாசிகை கும்பாபிஷேக முகூர்த்தத்தில் 8ம் இடத்திலுள்ள கிரக பலன்**

There should be no planet in the 8th house lest the family may perish.

8-ஆமிடத்தில் எந்த ஒரு கிரஹமும் இருக்கலாகாது. இருப்பின் குலநாசம் ஏற்படும்.

**- கௌசிகர் -**

நாட்டில் பிரிவு, நாட்டுக்குச் சுதந்திரம் போன்றவற்றை வழங்குபவர் கேது பகவான்.

04.02.1948ல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த போது துலா ராசியில் கேது பகவான் சஞ்சரித்தார். துலா ராசியிலே அவர் தற்போதும் சஞ்சாரம் செய்கிறார். 04.02.1948ல் சஞ்சரித்த பாகையில் 2022 ஜுலை ஆடி மாத ஆரம்பத்தில் சஞ்சரிப்பார். இக்காலத்தில் இலங்கையில் பெரிய மாற்றங்கள் நிகழ வாய்புள்ளது. பசி, பஞ்சம், பட்டினி, பொருளாதாரப் பிரச்சினை, திவால் நிலையில் நாடு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை! கடவுளின் அனுக்கிரகம் வேண்டிய இத்தருணத்தில், எரியும் தீயில் பெற்றோல் ஊற்றுவது போன்று, குலநாச பலன் முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்யலாமா?

நோய்க்கு மருந்து; மருந்திற்கு நோயல்ல. கும்பாபிஷேக தோஷத்திற்குப் பிரீதி; பிரீதி செய்வதற்காகப் பெரிய தோஷத்தில் கும்பாபிஷேகம் அல்ல. 06.07.2022 புதன்கிழமை ஆனி உத்தரத்தன்று பிரீதி செய்வதற்காக மகாதோஷ முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடக்கவுள்ளது. ஆலயம் திருக்கேதீஸ்வரம். காலம் காலை 09:00 மணி. குரு பகவானின் மகா தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்யவுள்ளார்கள். பிரீதியாக அந்தணருக்குத் தானம் கடலையும் மஞ்சள் நிற வேட்டியும் கொடுக்க உள்ளனர். பல கோடி செலவில் கோவில் கட்டி குலநாச பலன் முகூர்த்தத்தில் தேவப் பிரதிஷ்டை.

சிறிய நோய்க்கே மருந்து பெரியதற்கல்ல. விதியை மீறினால் குலநாசம். தர்மகர்த்தா, குருக்கள் குடும்பத்துடன் விண்வுலகிற்கு. இதைவிடப் பெரிய தண்டனை ஏதாவது உள்ளதா? தண்டனை இந்தளவு பெரியது என்றால் தோம் எவ்வளவு? மிகப் பெரியது. சுப முகூர்த்தத்தில் இதைவிடப் பெரிய தோஷம் வேறு எதுவும் இல்லை. இப்பெரிய தோத்திற்கே பிரீதி என்றால், ஏனைய தோஷங்கள் அனைத்திற்கும் பிரீதி செய்து வருடத்தின் 365 நாள்களிலும் 24 மணித்தியாலமும் கும்பாபிஷேகம் பண்ணலாம். சுப முகூர்த்தம் பார்க்கத் தேவையில்லை.

பிரீதி என்பது கடையில் விற்கும் விளையாட்டுப் பொருள் அல்ல. தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்வதற்குச் சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் உள்ளன. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் வேறு முகூர்த்தம் இல்லாத வேளையிலேயே பிரீதி செய்து கும்பாபிஷேகம் செய்யலாம். நீங்கள் நினைத்த நேரம் எல்லாம் பிரீதி செய்தால் அதனை ஏற்பதற்குக் கடவுள் ஒரு முட்டாள் அல்லர். திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக தினம் 06.07.2022 காலை 06 மணிக்கு உத்தம கும்பாபிஷேக முகூர்த்தம் உள்ளது. இந்நேரத்தில் பிரீதி செய்ய வேண்டிய பெரிய தோஷம் எதுவும் இல்லை. இந்நாளில் குலநாச பலன் தோஷம் உள்ள வேறொரு முகூர்த்தம் காலை 09 மணிக்கு பிரீதி செய்து கும்பாபிஷேகம் செய்பவர்களை எவ்வாறு அழைக்கலாம்?

06.07.2022 காலை 09 மணிக்கு சிங்க லக்கினத்திற்கு 11ல் சூரியன் உள்ளனர். இவர் சகல தோஷங்களைப் போக்க வல்லவர். இதனால் இந்த முகூர்த்தத்தில் தேவப்பிரதிஷ்டை செய்யலாம் என்று சொல்கிறார்கள். 11இல் சூரியன் தோஷங்களைப் போக்குவார் என்பது சரி. அவர் போக்கும் அளவுக்கு கும்பாபிஷேக முகூர்த்தத்தில் 8இல் குருவின் தோஷம் சிறியதல்ல. ஒருவொரு நாளும் 11இல் சூரியன உள்ளது. இந்நேரத்தில் ஒவ்வொரு நாளும் கும்பாபிஷேகம் பண்ணுவீர்களா?

சுப கருமங்களில் மிகவும் கடுமையான விதிகள் கும்பாபிஷேகத்திற்கே உள்ளன. ஜாதகம் கணிப்பது போன்று, சுப முகூர்த்த நாளின் நவக்கிரக நிலையைக் குறித்து முகூர்த்த லக்கினத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். முகூர்த்த லக்கினத்தில் 8ஆம் இடத்தில் எந்தவொரு கிரகமும் இருக்கக் கூடாது. 8ஆம் இடம் வெற்றிடமாக, சுத்தமாக இருக்க வேண்டும். 'சுக்லாம் பரதரம்.... ' சொல்லும் அனைவருக்கும் தெரிந்த இவ்விதி பூர்வ காரண ஆகமத்தில் (இணைப்பு 1) உள்ளது. இதனை மீறினால் குலநாசம் என்று காலப்பிரகாசிகையில் (இணைப்பு 2) உள்ளது.

ஆனி உத்தரம் 06.07.2022 புதன்கிழமை காலை 06:00 மணி முதல் 06:40 மணி வரை மிதுன லக்கினத்தில் சுப வேளையில் யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்திலும், மாரீசன்கூடல் கலப்பிராகிரி முருகமூர்த்தி கோவிலிலும் கும்பாபிஷேகம் நிகழ உள்ளது. வாக்கியத்தைப் பின்பற்றிய இவ்விரு ஆலயங்களும் திருக்கணிதப்படி கும்பாபிஷேகம் செய்கின்றன.

1. திருக்கேதீஸ்வரத்தில் நீண்ட காலமாகப் பின்பற்றி வந்த திருக்கணித பஞ்சாங்கத்தில் உள்ள தேவப் பிரதிஷ்டை (இணைப்பு 3) முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்யாதது ஏன்? அந்த முகூர்த்தத்தில் என்ன தவறு உள்ளது?

**இணைப்பு 3**

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| 12:36 a.m. வரை | 02:28 a.m. வரை | 04:29 a.m. வரை | 06:44 a.m. வரை |
| 10 குரு | 11 செவ்வாய் ராகு | 12 சுக்கிரன் | லக்கினம் சூரியன் புதன் |
| கும்பம் 10:54 p.m. வரை | தேவப்பிரதிஷ்டை முகூர்த்தம் நவக்கிரக நிலை ஆனி 22 புதன்கிழமை 06-07-2022 மிதுன லக்கின சுப முகூர்த்தம் காலை 05:56 முதல் 06:44 வரை கும்பாபிஷேகம் | | கடகம் 06:51 a.m. வரை |
| 9 சனி | | | 2 |
| மகரம் 09:09 p.m. வரை | | | சிங்கம் 10:52 a.m. வரை |
| 8 | 8ல் கிரகங்கள் எதுவும் இல்லை. ஆகமப்படி உத்தம சுப முகூர்த்தம் | | 3 |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| 07:12 p.m. வரை | 05:04 p.m. வரை | 02:54 p.m. வரை | 12:50 p.m. வரை |
| 7 | 6 | 5 கேது | 4 சந்திரன் |

**இணைப்பு 4**

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| 12:36 a.m. வரை | 02:28 a.m. வரை | 04:29 a.m. வரை | 06:44 a.m. வரை |
| 8 குரு | 9 செவ்வாய் ராகு | 10 சுக்கிரன் | 11 சூரியன் புதன் |
| கும்பம் 10:54 p.m. வரை | 8ல் குரு - ஆகமப்படி குலநாச பலன் அசுப முகூர்த்தம் | | கடகம் 06:51 a.m. வரை |
| 7 சனி | திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேகம் நவக்கிரக நிலை ஆனி 22 புதன்கிழமை 06-07-2022 சிங்க லக்கின முகூர்த்தம் காலை 09:00 முதல் 10:30 வரை | | 12 |
| மகரம் 09:09 p.m. வரை | | | சிங்கம் 10:52 a.m. வரை |
| 6 | | | லக்கினம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
| 07:12 p.m. வரை | 05:04 p.m. வரை | 02:54 p.m. வரை | 12:50 p.m. வரை |
| 5 | 4 | 3 கேது | 2 சந்திரன் |

2. 06.07.2022 கலை 09 மணிக்கு சிங்க லக்கினத்தில் 8 இல் குருவுக்குப் பிரீதி செய்து கும்பாபிஷேகம் செய்ய விஞ்ஞாபனம் (இணைப்பு 4) வெளியிட்டுள்ளார்கள். ஆகம, சாஸ்த்திரங்களில் சிங்க லக்கினத்தில் 8 இல் குருவுக்குப் பிரீதி செய்து தேவப்பிரதிஷ்டை செய்யலாம் எனச் சொல்லப்பட்டுள்ளதா? ஆதாரத்தைத் தாருங்கள்?

3. சிவபெருமானால் அருள்பெற்ற ஆகமத்தில் 8 இல் கிரகம் உள்ள நேரத்தில் தேவப் பிரதிஷ்டை செய்யக் கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்விதியை மீறி 8 இல் குரு உள்ள நேரத்தில் கும்பாபிஷேகம் செய்ய உள்ளீர்கள். ஆகமம் பிழை என்று சிவனுக்கே உபதேசமா?

இக்குழப்பத்திற்கு வாக்கிய, திருக்கணிதப் பிரச்சினையே காரணம். திருக்கேதீஸ்வரத்தில் நீண்ட காலமாகத் திருக்கணிதம் பின்பற்றப்பட்டு வருகிறது. இங்கு வாக்கிய விசிறி ஐயர்கள் கும்பாபிஷேகம் செய்ய வந்துள்ளனர். திருக்கேதீஸ்வர நிர்வாகம் திருக் கணிதப்படி கும்பாபிஷேக முகூர்த்தத்தை நிர்ணயம் செய்தது. அதில் முகூர்த்த நேரத்தை கும்பாபிஷேகம் செய்ய வந்த வாக்கிய விசிறிகள் மாற்றி விட்டனர்.

06.07.2022 அன்று சனி வாக்கியத்திற்கு மகரத்திலும் திருக்கணிதத்திற்கு கும்பத்திலும் சஞ்சாரம் செய்கிறார். இதனால் திருக்கணிதப்படி அன்று காலை 06 மணிக்கு மிதுன லக்கின கும்பாபிஷேக முகூர்த்தம் உள்ளது. இந்நேரத்தில் வாக்கிய முகூர்த்தம் இல்லை. 06.07.2022 காலை 06:44இன் பின்னர் எந்தவொரு பஞ்சாங்கப்படியும் கும்பாபிஷேக முகூர்த்தம் இல்லை. 06.07.2022 காலை 08:39இன் பின்னர் மரணயோகம் என்று தமிழகத்தின் பிரபல்யமான பாம்பு வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளது.

திருக்கணிதத்தில் 06.07.2022 கும்பாபிஷேக முகூர்த்தத்தைப் பார்த்த இரகுநாதையர் அந்நாளில் ஒரு முகூர்த்தத்தைப் பிழையாகக் கணித்தார். 8 இல் குருவுக்குப் பிரீதியுடன் சிங்க லக்கின கும்பாபிஷேக முகூர்த்தம் குறித்தார். 8 இல் கிரகப் பிரீதியுடன் கும்பாபிஷேக முகூர்த்தம் குறிப்பது பிழை. இரகுநாதையருக்குக் கிரக நிலை கணிக்கவும் தெரியாது, லக்கினம் கணிக்கவும் தெரியாது. முகூர்த்த நேரத்தைப் முற்பகல் 10:56 முதல் 11:54 வரை என்று பிழையாகக் கணித்து விட்டார். இந்நேரத்தில் கன்னி லக்கினமே உள்ளது. இவரது முகூர்த்தத்தில் திருத்தம் செய்து காலை 09 மணி சிங்க லக்கின முகூர்த்தத்தில் திருக்கேதீஸ்வர கும்பாபிஷேக விஞ்ஞாபனம் வெளிவந்துள்ளது.

பிழையான வாக்கிய பஞ்சாங்கத்தை 80 சதவீத மக்கள் சரி என்று நம்பிப் பின்பற்றுகின்றனர். ஏனையோர், சரியான திருக்கணிதத்தைப் பின்பற்றுகின்றனர். திருக்கணிதத்தைச் சரி என்று நிரூபிக்க முடியும். வாக்கியத்தை பிழை என்றே நிரூபிக்கலாம். வாக்கிய பஞ்சாங்கமே இலங்கையை அழித்தது. 25.02.1952 சூரிய கிரகணம் இலங்கையில் தோற்றும் என்று வாக்கியத்தினர் குறித்தனர். சூரிய பகவான் கிரகணமடையாது வானில் பிரகாசமாகத் தோன்றி வாக்கியம் பிழை என்று சொல்லி விட்டார். அன்று நடையைச் சாத்த வேண்டியவர்கள் இன்று வரை உலகம் முழுவதும் குப்பை கொட்டுகிறார்கள். 1986ல் கார்த்திகை விளக்கீட்டைப் பிழையை ஐப்பசியில் குறித்து நாட்டையும் மக்களையும் அழிக்கும்படி தீபம் ஏற்றி வழிபட வைத்தார்கள். இதன் விளைவாக 1987இல் உருவான இந்தியப் படை யுத்தப் பேரழிவு 1990 வரை தொடர்ந்தது. வாக்கியத்தினர் 2005இலும் கார்த்திகை விளக்கீட்டை ஐப்பசியில் குறித்தனர். அந்நாளில் நாட்டையும் மக்களையும் அழிக்குமாறு நல்லூர் முருகனுக்கு தீபம் ஏற்றி வழிபாடு செய்தனர். இதன் பின்னர் 2006 இல் மாவிலற்றில் ஆரம்பித்த யுத்தம் 2009ல் முள்ளிவாய்க்கால் வரை சந்நதம் ஆடியது. வருடம் தோறும் மலடி, விபச்சாரி, விதவை,...மரண பலன் விவாக முகூர்த்தங்களைப் பஞ்சாங்கத்தில் குறிக்கின்றனர். இப்பஞ்சாங்கத்தைத் தடை செய்தால்தான் இலங்கைத் தமிழர்கள் நல்லாக வாழ முடியும்.

குலநாச பலன் கும்பாபிஷேகத்தால் பலிக்கடா ஆகுவது தர்மகர்த்தா, குருக்கள்,.....நாட்டு மக்கள். இதனால் அனைவருக்கும் தீமையே. எவருக்கும் நல்ல தல்ல. அசுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய் பவர்களே பின்விளைவுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். தர்மகர்த்தா அவர்களே, உங்களையே காப்பாற்ற வேண்டிய நிலையில் நீங்களே உள்ளீர் கள். அனைவரது நலனையும் கருத்தில் கொண்டு கும்பாபிஷேக நேரத்தைக் காலை 06:00 மணி முதல் 06:40 மணி வரை உள்ள உத்தம மிதுன லக்கின முகூர்த்தத்திற்கு மாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

# மெய்நிகர் பொழுதுபோக்கு வணிகத்தில் நகரும் படங்கள்

## நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மெய்நிகர் பொழுதுபோக்கு வணிகம் பற்றி சென்ற தொடர்களில் பார்த்து வருகின்றோம். பொழுது போக்கிற்கான பல்வேறு அனிமேசன் திரைப்படங்களைத் தயாரிக்கும் திரைப்பட நிறுவனங்கள் உள்ளன. இதில் ட்ரீம்வொர்க்ஸ், டிஸ்னி, பிக்சர், வார்னர் பிரதர்ஸ், சோனி போன்றன மிகவும் பிரபலமானவை.

மேலேகுறிப்பிட்ட அனிமேசன் ஜாம்பவான்கள் தமக்கான சொந்த பாணி அனிமேசன் பாணியைக் கொண்டுள்ளன. மேலும் ஒவ்வொன்றிலிருந்தும் வெவ்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

'அனிமேசன்'(இயங்குபடம்) என்ற நுட்பியல் அவத்தை திரைப்படங்களில் அதிகம் ஆதிக்கம் செலுத்துகிறது. அனிமேசன் என்பது ஒரு நுட்பமாகும், இது நகரும் படங்களைக்கொண்டு உருவாக்கப்படுகின்றன. பலபடங்கள் அசைவதால் நகரும்படம் போல தோற்றமளிக்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் கையால் வரையப்பட்ட வரைபடங்கள் மென்மையான செல்லுலாய்டு தாள்களில் ஓவியங்கள் வரையப்பட்டு படங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் படங்கள் ஒரு தூரிகை மூலம் வரையப்படுகின்றன.



இதனைத் தொடர்ந்து கணினி உதவி அனிமேசன் படங்கள் உருவாக்கப்பட்டன. இன்று பெரும்பாலான அனிமேசன் திரைப்படங்கள் கணினியில் உருவாக்கப்பட்ட படங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன.



உண்மையில் அனிமேசன் என்பது ஒரு காட்சி கலை வடிவமாகும், இது இயக்கத்தின் மாயையை உருவாக்க தொடர்ச்சியான படங்களை விரைவாகக் காண்பிக்கும்.

இந்த மாயையானது ஒவ்வொரு தனி சட்டத்தையும் காட்டுவதன் மூலம் அல்லது மீண்டும் மீண்டும் வரைவதன் மூலம் உருவாக்கப்படுகிறது, பொதுவாக ஒரு நொடிக்கு 24 முறை என்ற அடிப்படையில் இருக்கும்.

அனிமேசன் என்ற நுட்பம் முதல் முதலில் 1887 ஆம் ஆண்டு பிரெஞ்சு திரைப்பட முன்னோடி எமில் ரெய்னாட் திரைப்படங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டது.

முதல் அனிமேசன் நுட்பம் மிகவும் மெதுவாக இருந்தது. இது வினாடிக்கு பிரேம்கள் (FPS) நுட்பத்தைப் பயன்படுத்தி பொருள்களை நகர்த்துவதை உள்ளடக்கியதாகவிருந்தது. இந்த வகையான அனிமேசன் மிகவும் நேரத்தை எடுத்துக்கொண்டது. பெரும்பாலும் ஒரு சட்டத்தை முடிக்க நாள்கள் அல்லது வாரங்கள் ஆகும்.

இன்று பிரபலமான அனிமேசன் படங்கள் பாரம்பரிய பாணி மற்றும் கணினி அனிமேசன் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்துகின்றன. அனிமேசனை உருவாக்குவதற்கு பல அடிப்படை முறைகள் உள்ளன:

இன்று கணினி அனிமேசன் வசதி பலவற்றை எளிதாக்கியிருக்கிறது. அதாவது பல படங்கள் ஒரே நேரத்தில் நகரும் மற்றும் ஒரு நேரத்தில் ஒரு திரையில் காட்டப்படுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. இங்கு, திசையன் அடிப்படையிலான இயங்கக்கூடிய கிராபிக்ஸ் இயக்கத்தின் மாயையை உருவாக்க கணித சமன்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

PowToon தொழில் முறை, அனிமேஷன்வீடியோ விளக்கக்காட்சிகளை உருவாக்குவதற்கான சிறந்த அனிமேசன் மென்பொருளாகும். இது பயன்படுத்த எளிதானது மற்றும் பல்வேறு சிறந்த அம்சங்களைக்கொண்டுள்ளது. இதில் வீடியோ விளக்கக்காட்சிகள் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருக்கும்.



ஆனால், அனிமேசன் மென்பொருளைப் பற்றிய முன் அறிவு இல்லாமல் அனிமேசன் வீடியோக்களை உருவாக்க Biteable உதவுகிறது. இதில் 3D கமரா அசைவுகள் அடங்கலான உயர்தர வீடியோக்களை உருவாக்கக்கூடிய பல அம்சங்களை இந்தத் தளம் வழங்குகிறது. மேலும், பல்வேறு வண்ணங்கள், பாணிகளில், முன் தயாரிக்கப்பட்ட வார்ப்புருக்கள் உள்ளன. எந்த வகையான வீடியோவை உருவாக்குவது என்பதைப் டெம்ப்ளேட்டை தெரிவு செய்யலாம்.



அனிமேசன் என்பது யோசனைகள் மற்றும் கதைகளைத் இணைப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். புத்தகங்கள் அல்லது திரைப்படங்கள் போன்ற பிற ஊடகங்களில் தெரிவிக்கப்படாத தகவல்களை இணைப்பதற்கு இது பயன்படுத்தப்படலாம்.

அனிமேசன் என்பது ஒரு சக்திவாய்ந்த கருவியாகும், இது கற்பனை செய்யக்கூடிய எந்த கதையையும் சொல்ல பயன்படுகிறது. அது குழந்தைகளுக்காகவோ அல்லது பெரியவர்களுக்கானதாகவோ இருந்தாலும், பார்வையாளர்களை வசீகரிக்கும் மற்றும் விடயங்களைப் பற்றிய பார்வையை மாற்றும் ஆற்றல் கொண்டது.

உண்மையில் அனிமேசன் என்பது வரம்பற்ற ஆற்றலைக் கொண்ட ஒரு கலை வடிவமாகும், அதை எவரும் அனுபவிக்க முடியும். இந்தக்கலைவடிவம் 1800களில் இருந்து வந்த ஒரு கலை வடிவமாகும், ஆனால் 1900களின் முற்பகுதியில்தான் அனிமேசன் சமூகத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

கதைகளைச் சொல்லவும், உலகங்களை உருவாக்கவும், நிஜ வாழ்க்கையில் பார்க்க முடியாததைக் காட்டவும் அனிமேசன் ஒரு சிறந்த வழியாகும்.

1800 களின் பிற்பகுதியில், பிரெஞ்சு -கனடிய கண்டுபிடிப்பாளர் சார்லஸ் - எமைல் ரெய்னாட் ப்ராக்ஸினோஸ்கோப்பை உருவாக்கி, அனிமேசன் படங்களைத் தயாரித்து பொதுத் திரையிடல்களில் காட்டினார்.

1908 ஆம் ஆண்டில், அமெரிக்கன் எட்வின் போர்ட்டர் என்பவர் ரயிலைக் கொள்ளையடிக்கும் முதல் காட்சியில் அனிமேசனைப் பயன்படுத்தினார். இதுவே அனிமேசன் பயன்படுத்தப்பட்ட முதல் திரைப்படமாகும். 1912 ஆம் ஆண்டில், வின்சர் மெக்கே 'கெர்டி தி டைனோசர்' என்ற அனிமேசன் திரைப்படத்தை உருவாக்கினார், அதில் பல்வேறு வகையான அனிமேசன் பாணிகள் பயன்படுத்தப்பட்டன.

அனிமேசன் என்பது ஒரு படைப்பு, கலை வடிவம். இது இயக்கத்தின் மூலம் கதைகளைச் சொல்கிறது, ஆனால் அந்தக் கதையை எவ்வாறு தெரிவிக்கப்படுகிறது என்பது அனிமேசன் வகையைப் பொறுத்தது.

டிஸ்னி திரைப்படங்கள் தொடக்கம் வீடியோ கேம்கள், வீடியோக்கள் வரை எல்லாவற்றி லும் நவீன அனிமேசனைக் காணலாம். இன்று மிகவும் பிரபலமான அனிமேசன் வகையானது கணினியால் உருவாக்கப்பட்ட 3டி அனிமேசன் வகையாகும்.

இங்கு, நான்கு வெவ்வேறு வகையான அனிமேசன்கள் உள்ளன 2டி, 3டி, அசைவற்றது, அசைவியக்கம் கொண்டது என்ற வகைகளாகும். ஒவ்வொரு வகைக்கும் தற்போது மென்பொருள் பயன்பாட்டிற்கு கிடைக்கின்றது.



- தெல்லியூர் சி.ஹரிகரன் -

# உயிர்காவு கொடுத்து பெறும் எரிபொருள்!

எரிபொருள்கள், இன்று நீர், உணவு, உறையுள் போன்ற மனித வாழ்வுக்கு அவசியமானவற்றில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. எரிபொருளுக்காக வரிசையில் நின்று மாரடைப்பு, உடல் சோர்வால் இறந்தவர்கள் 15 ஐத் தாண்டியுள்ளது. வரிசையில் வீதியில் காத்திருக்கும்போது வாகனங்கள் மோதி மரணித்தவர்களும் உளர். கைகலப்புகளால் காயப்பட்டவர்கள் ஏராளம். அதில் பொலிஸாரும் அடக்கம். நான் கடந்த வாரம் “சரியான திட்டமிடல் இல்லாததால் எரிபொருளுக்காக மக்கள் அவதி, ஒழுங்குபடுத்துவாரா யாழ். மாவட்ட செயலர்?” என்று இதே பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அன்றைய தினமே ‘அட்டை’ முறைமை தொடர்பில் பிரதேச செயலர்களுடன் சந்திப்பை நடத்தி அட்டை தொடர்பான திட்டமிடல் வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னமும் சரியான கட்டமைப்புடன் அது நடைமுறைக்கு வரவில்லை.

அந்தப் பத்தியில் நான் குறிப்பிட்டேன், யாழ்ப்பாணத்தில் உயிர் காவுகொள்ளப்படுவதற்கு முன் ஏற்ற ஒழுங்குகளை மாவட்ட செயலர் மேற்கொள்வாரா என்று? கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் எரிபொருள் நிலையம் ஒன்றில் இரு இளைஞர்களுக்கும் அங்கு நின்றவர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு, கைகலப்பாக மாறி ஓர் உயிரும் அநியாயமாகக் காவுகொள்ளப்பட்டுவிட்டது. இன்னும் எத்தனை உயிர்கள் யாழில் காவுகொள்ளப்படப்போகின்றனவோ தெரியவில்லை.

தற்போதும் எரிபொருள் வருமோ வராதோ தெரியவில்லை. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிள்ளையார் கலியாணம் போன்று இன்று கப்பல் வரும் நாளை கப்பல் வரும், அடுத்தவாரம் வரும் என்று கதைவிடுகிறார்.

யாழிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பலவற்றில் எரிபொருள் வருமோ இல்லையோ மோட்டார் வாகனங்களை ஒரு வரிசையிலும் ஓட்டோக்கள், கார்களைப் பிறிதொரு வரிசையிலும், கனரக வாகனங்களை மறுபுறம் வரிசையிலும் விட்டுள்ளார்கள். சில நிலையங்களில் ஒரு வாரமாக வாகனம் தொடர் வரிசை காணப்படுகின்றது. எரிபொருள் வந்ததும் பெரும்பாலும் 3 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் லீற்றரே ஒரு நிலையத்துக்கு வழங்கப்படுகின்றது. பல நாள்களாக வரிசையில் உள்ள வாகனங்களுக்கு வழங்கவே அந்த எரிபொருள் போதுமானதாக பெரும்பாலும் இருக்கும். தினமும் கடமைக்குச் செல்லும் அத்தியாவசிய சேவைகளான சுகாதாரத் துறை, ஆசிரியர்கள், பிரதேச சபையினர், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தமது கடமை முடிந்து எரிபொருள் பெற வந்தால் பல மணி நேரம் காத்திருந்த பின்னர் எரிபொருள் முடிந்துவிட்டது, ‘பம் எயார் எடுத்துள்ளது’ என்ற கூற ஏமாற்றத்துடன் வீடு திரும்புவர்.

இதில் எந்தளவு உண்மைத்தன்மை உள்ளது என்று பலரும் ஏங்குகின்றனர். உண்மையில் எரிபொருள் முடிந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கூற அந்தப் பிரதேச கிராம உத்தியோகத்தர், பொலிஸ் அத்தியட்சகர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற அணியினர் உறுதிப்படுத்தி மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

அரச பணிகளில் சகல தொழிலாளர்களிலும் விட சுத்திகரிப்பு தொழிலை மேற்கொள்பவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கவேண்டும். அவர்களுக்கு கடமை நேரம் அதிகம். விடுமுறை கிடைப்பதும் கடினம். அவர்கள் தமது கடமையை ஒழுங்காக ஆற்றாவிடில் நாடே நாறும். வைத்தியர்கள், ஏனைய தொழில் முறைகளிலும் விட அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுவது அவசியம்.

இவ்வாறு தொழில் முடிந்ததும் வந்து வரிசையில் காத்திருந்து பெற்றோல் முடிந்து ஏமாற்றத்துடன் திரும்பும் அரச ஊழியர்கள் பெரும்பாலானவர்களுக்கு மறுநாளும் இதே அவலம்தான். பெரும்பாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் 10 மணிக்கே வழங்கப்படுகின்றது. சுத்திகரிப்பு தொழிலாளர், சுகாதாரத் துறையினர், ஆசிரியர்கள் காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் கடமைக்குச் செல்கின்றனர். அவர்களுக்கு நாள்கணக்கில் வாகனங்களை வரிசையில் நிறுத்திவிட்டு செல்வதும் கடினம்.

ஒருநாள் இவ்வாறு காத்திருந்து திரும்புபவர்களுக்கு ஒழுங்குக் கிரமமாக டோக்கன் வழங்கி மறுநாள் வரும்படி அழைத்தால் நன்று. அதிலும் சிக்கல் உள்ளது. மறுநாள் அந்த நிலையத்துக்கு எரிபொருள் வரமாட்டாது. வேறு பல மைல் தூரத்திலுள்ள ஒரு நிலையத்தில் வழங்கப்படும். இதற்கு ஏற்ற ஒழுங்கு முறைகளை மாவட்ட செயலர்தான் ஏற்படுத்த வேண்டும். தமிழர் ஆசிரியர் சங்கம் சரியான திட்டமிடல் இல்லாவிட்டால் இன்று திங்கட்கிழமை முதல் கற்பித்தல் செயற்பாட்டை இடைநிறுத்த உள்ளோம் என்று அனைவரது ஒத்துழைப்பையும் நாடியுள்ளார். ஆனால், வடக்கு ஆளுநரோ, அரச அதிபரோ எந்தத் திட்டமிடல் இன்றி குழம்பிப்போய் பேசாமடந்தைகளாக உள்ளார்கள். எமது அரசியல் தலைமைகள் இருக்கிறார்களோ இல்லையோ என்று தெரியவில்லை என மக்கள் புலம்புகின்றார்கள்.

இன்னொரு விடயத்தையும் கவனிக்கவேண்டும். ஓர் எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருள் வழங்கினால் அதற்கு அருகிலுள்ள சகல நிலையங்களுக்கும் ஒரே நேரத்தில் வழங்கவேண்டும். உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று நிலையங்களுக்கும் ஒரே நேரத்தில் எரிபொருள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதேபோல் சுன்னாகம் – மருதனார்மடத்தில் உள்ள ஐந்து நிலையங்களுக்கும் பிறிதொரு தினத்தில் ஒரேயடியாக எரிபொருள் வழங்க வேண்டும். இதேபோன்று சகல இடங்களுக்கும் செயற்படுத்தவேண்டும். இவ்வாறாக வழங்கினால் மக்கள் வரிசையில் காத்திருப்பது ஓரளவு குறையும். வாகனங்களை நிறுத்திவிட்டு அவர்கள் தேவையில்லாத செயற்பாடுகளை மேற்கொள்வது, முரண்பாடுகளை உருவாக்குவது என்பவையும் தவிர்க்கப்படும்.

இதே நிலைமை தொடர்ந்தும் நீடிக்குமானால் மோட்டார் சைக்கிள்களில் வரும்போது பெற்றோல் முடிந்தால் அதை வீதியிலே விட்டுவிட்டு, சைக்கிளில் வருபவரை தாக்கிவிட்டு சைக்கிளைப் பறித்துச் செல்லும் நிலைதான் நாட்டில் விரைவில் ஏற்படும். தற்போது வாகனங்களை விட சைக்கிளுக்குத்தான் கிராக்கி அதிகம்.

வடக்கு ஆளுநர் மக்களின் இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறான திட்டமிடல் ஊடாகத் தீர்வை வழங்குவது என்று சிந்திக்காமல் – அந்த வரிசைகளை எவ்வாறு குறைப்பது என்று எண்ணாமல் – நீண்ட வரிசையில் காத்திருப்பவர்கள் உடற் தாகத்தை எவ்வாறு தணிக்கலாம். அவர்களுக்கு நீராகாரம் வழங்குங்கள் என்று அறிக்கை விடுத்துள்ளார். அது நல்ல விடயம். ஆனால், அதைவிடுத்து இந்தப் பிரச்சினையை எவ்வாறு இல்லாமலாக்கலாம் என்று சிந்திக்கவேண்டும்.



‘அட்டை’ முறை நடைமுறைக்கு வந்த பின்னராவது இந்த உயிர் கொடுத்து எரிபொருள் வாங்கும் அவலம் தீருமா? இல்லை இனி நாம் பெற்றோல் அடிக்கச் சென்று வீடு திரும்பிய பின்னர்தான் மனைவி, பிள்ளைகள், அப்பா உயிரோடு வெற்றிகரமாகத் திரும்பி வந்துவிட்டார் என்று சந்தோசமடைவரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-47

**ஜே.ஆரின் ‘தர்மங்களும்’ காலிமுகத்திடல் ‘தார்மீகங்களும்’**

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா இன உறவுகளுக்கான – ஒரு நாட்டிற்கான – தர்மங்களைக் கூறி, இன்று கிட்டத்தட்ட 50 வருடங்கள் ஆகின்றன். அன்றிலிருந்து நமது தமிழ் தலைவர்களின் நேரடிப் பேச்சுவார்த்தைகள், இந்திரா



காந்தி மூலமாக ஏற்படுத்தப்பட்ட சர்வ கட்சி மாநாடுகள் பின்னர் ராஜீவ் காந்தியின் பேச்சுக்கள், அதைத் தொடர்ந்து இலங்கை – இந்திய ஒப்பந்தம், போரின் இடையே ஏற்பட்ட இணக்கங்கள், பிரேமதாஸாவின் ஈடுபாடு, சந்திரிக்காவின் சமாதானங்கள், நோர்வே பேச்சுக்களில் எழுந்த இணக்கங்கள், ராஜபக்ஷக்களின் தந்திரங்கள், ரணிலுடனான நல்லாட்சி ஏற்பாடுகள், கோட்டாவின் எழுச்சியின் பின்பு அவர் பதவியேற்று இரண்டு வருடங்களில் நிதி நெருக்கடி நிலையை அண்டி ஏற்படுத்திய பேச்சுக்கள் எனத் தமிழ் மக்கள் பலவற்றைப் பார்த்து விட்டார்கள்

இவற்றில் எல்லாம் ஓர் அரசியல் பகுதி ஏற்றுக்கொண்டதை மற்ற அரசியல் பகுதி எதிர்த்து முறியடித்ததுதான் நடந்து வருகிறது. நோர்வேப் பேச்சுக்களில் சமஷ்டி அரசியல் முறைமையில் ஒரு தீர்வை நோக்கிப் போகலாம் என இணக்கங்கள் இருந்தாலும், மஹிந்த ஜனாதிபதியானதும் அதனை அவர் போருக்குத்தான் கொண்டு சென்றார்.

சிங்களப் பேரினவாதம் அன்றிலிருந்து இன்றுவரை, ’ஒரு நாடு’, ‘ஸ்ரீலங்காவின் மக்கள்’ என்ற அடையாளத்தையே பேசுகிறது. அதைத் தவிர்த்து, அரசியல் தீர்வாக இனப்பிரச்சினைக்கும் அதன் உறவுகளுக்கும் அவர்கள் வேறு எதையும் முன் வைத்தவர்கள் அல்லர்.

தமிழ் மக்கள்தான் சமஷ்டியிலிருந்து இறைமை மீட்பு, தனிநாடு, தேசம், கூட்டாட்சி, இணைப்பாட்சி, மாநில சுயாட்சி என்று மாறி மாறிப் பேசியிருக்கிறார்கள்.

கோட்டாபயவோ புதிய அரசமைப்பு ஒன்றைத்தான் உருவாக்க வேண்டும் என அறிவித்து, அது ஒரு நாடு, பௌத்தத்துக்கு மேலாண்மை, ஒரு சட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாக அமையும் என வெளிப்படையாகத் தெரிவித்தார்.


ஆயின் தமிழ் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது கட்சி நிலைக்கேற்ப சரித்திரத்தைச் சொல்லி, பிரிவினையை நாம் கோரவில்லை, சமஷ்டி, சுயாட்சி, கூட்டுறவான நிர்வாகமுறை, தமிழர் தேசத்தை ஏற்றுக் கொள்வது என்று தங்கள் கோரிக்கைகளை வைத்தார்கள்.

கடைசியில், அரசமைப்பு உருவாக்க ஆய்வுக்குழு என்ன செய்தது? ஒற்றையாட்சிக்கான சரத்துக்களை புதிய அரசமைப்பில் பலமானதாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

காலிமுகத்திடலில் எழுந்த தார்மீகம் இப்போது எதனை வெளிப்படுத்தியது? இனவாத அரசியல்வாதிகளால் இன உறவுகள் சீரழிந்தன, நாடு வங்குரோத்து நிலைக்கு வந்துள்ளது, நாட்டை எல்லோரும் ஒரு நாட்டு மக்களாக இனவாத அரசியல்வாதிகளிடம் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்றுதான் கூறுகிறார்கள். மக்களை மையப்படுத்தி, நிர்வாகம் அவர்களுக்குப் பொறுப்புக்கூற கடமைகளைக் கட்டாயமாக்கி, எல்லா மக்களும் சரிசமமாக நடத்தப்பட வேண்டும் என்கிறது.

ஆக, ஜே.ஆர். தந்த ’தர்மங்கள்’ 50 வருடங்களின் பின் இப்போது ‘தார்மீகமாக’ சொல்லப்படுகின்றது. அவ்வளவுதான். சிங்கள பெரும்பான்மையின் பார்வையில், இன உறவுகள், உரிமைகளை ஒட்டி என்ன மாற்றங்கள் இவ்வளவு வருடங்களின் பின் தெரிகின்றன?

சரத் வீரசேகர மிக வெளிப்படையாகவே தமிழ் மக்கள் சிங்கள பௌத் தர்களின் பொறுமையை இனியும் சோதிக்கக் கூடாது என பயமுறுத்தல்கள் தருகிறார். அது முன்னர் நடத்தப்பட்ட கலவரங்கள் போல் சிங்கள மக்கள் கொதித்து எழுவார்கள் என்ற மிரட்டல்கள், வெருட்டல்களாக அமைந்தன. இதைத்தான் ஜே.ஆர். ஐம்பது வருடங்களுக்கு முன் “இதை நான் சொல்லவில்லை. நாடாளுமன்றத்திற்கு வெளியே உள்ள சிங்கள மக்கள் சொல்லுகிறார்கள்” என்றார். சரத் வீரசேகர அதை நாடாளுமன்றத்தில், நாடாளுமன்றத்தின் ஊடாகவே சொல்கிறார். அதுதான் வித்தியாசம். அப்படியானால் இவ்வளவு காலமும் நடத்திய அரசியலின் இணக்கப் பேச்சுக்கள், சத்தியாக்கிரகங்கள், ஆயுதப் போராட்டங்கள் இவற்றினால் தமிழ் மக்கள் பெற்றவை என்ன?



மானம் உள்ளவர்களாக வாழ்வதற்கு அதர்மங்களுக்கு அடிபணியாது, ஓர் இலட்சியத்துக்காக எந்த ஆகுதியையும் தருவார்கள் என்ற உறுதியை உலகுக்கு எடுத்துக் காட்டினார்கள் தமிழர்கள்.

ஆனால் இன்றுள்ள நிலையில் அரசியலிலும் தோற்றவர்கள் ஆகத் தான் இருக்கிறார்கள்.

அவர்கள் நம்பிக்கை வைத்த பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம், சுந்தரலிங்கம், சிவசிதம்பரம், திருச்செல்வம், நாகநாதன், ராஜதுரை, வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, நீலன் திருச்செல்வம் போன்ற தலைவர்கள் பேச்சுக்களாலும், பின்னர் பிரபாகரன் போரினாலும் பெற்றுக்கொள்ள முடியாததைத் தாங்கள் தொடர்ந்து பேசுவதால் பெற்றுத் தருவோம் என்று இன்றைய அரசியல்வாதிகள் சொல்வதைத் தமிழ் மக்கள் நம்பிக் கொண்டே இருந்தால் அந்த முட்டாள்தனங்களுக்கு விளக்கங்கள் காணமுடியாது. அந்த அரசியல்வாதிகளும் இந்தத் தமிழ் மக்களை சுத்த



மடையவர்களாக வைத்து அரசியல் செய்கிறார்கள். அவர்களுக்கு மக்களது நிலைக்கு ஏதும் பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தங்கள் இல்லை. எதற்கும் சிங்கள அரசுகளை சுட்டிக்காட்டி விட்டால் போதும்.

இவ்வளவு கால வரலாற்றில், தன்மானம் உள்ள மக்களாக வாழவேண்டும் என்ற இலட்சியத்துக்கான விடாப்பிடி தன்மையையும், விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது தலைவர் பிரபாகரனுக்கும் இருக்கும் விசுவாசத்தையும் தவிர, அவர்கள் பெற்றுக் கொண்டதானால் அது, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைப் பலவந்தப்படுத்தி தமிழர்களுக்காகப் பொறுப்பேற்றுப் பெற்றுக் கொண்ட இலங்கை – இந்திய ஒப்பந்தமே உண்டு.

அதில் வடக்கும், கிழக்கும் இணைந்த மாகாணங்களாக, அவை தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களாக வரையறுக்கப்பட்டன. அந்தப் பகுதிக



ளுக்கு மாநில அரசுக்கான அதிகாரப் பரவலாக்கம் உள்ளடக்கப்பட்டன. ஆனால் அதனை உருவாக்கிய நாள்களில் இருந்தே விடுதலைப் புலிகள் அதனை எதிர்த்து, இந்தியாவுடன் போரிட்டு, தங்களது இறைமையை மீட்டெடுப்போம் எனச் சபதம் செய்தார்கள். விடுதலைப் புலிகளின் ஆளுமைகளால் மிதவாத தமிழ் பரப்புகளும் அதனை ஏற்று நடத்தத் தயங்கியமையைப் பாவித்த பேரினவாத அரசுகள், அரசியல் யாப்பில் இணைக்கப்பட்ட இந்த 13 ஆவது சரத்தை எப்படியாவது நீக்கிவிட வேண்டுமென்று அதிக முயற்சிகள் எடுத்தன. முயற்சிகள் கைகூடாது போகவே அவற்றை அமுல்படுத்தாமல் விடுவதற்கு ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, அதிகாரப் பரவலாக்கத்தைக் கேலிக்கூத்தாக்கி, தற்போது கோட்டாபய தான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுதலைப் புலிகளைப் போரில் வென்றது போல, இந்த அதிகாரப் பரவல் அமைப்பையும் புதிய அரசமைப்பு யாப்பு மூலம் இல்லாது ஒழித்து விடுவேன் என வாக்குகள் கேட்டார். அதற்கான அனுமதியை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் மூலம் சிங்கள மக்கள் தந்தார்கள். அவர்கள் அமைத்த அரசமைப்பு உருவாக்க ஆய்வுக் குழுவும், ஒற்றையாட்சி முறைமையை புதிய அரசமைப்பில் மேலும் பலப்படுத்த வேண்டும் என அறிக்கைகள் தந்துள்ளது.

ஆனால், கர்மத்தின் விளைவுகளால் அவை, நடந்தேறுமுன் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் கோட்டாவைக் கட்டிப்போட்டு உள்ளன.

(வளரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=